[1st February 1972

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether it is proposed to set up an agency for cotton development or to appoint a Committee to go into the question of cotton development?

THE HON. THIRU A. P. DHARMALINGAM : 'Committee' தான்.

Taxi Stand

* 87 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any proposals have been sent to the Railways by the Commissioner of Police about the taxi stand facilities in the Central Station ; and

(*b*) if so, the details thereof?

வாடகைக் கார் நிறுத்துமிடம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வாடகைக் கார்கள் நிறுத்துமிடத்திற்கான வசதிகள் கோரி, காவல் துறைக் கமிஷனருக்கு இரயில்வே துறை செயற்குறிப்புகள் எதையேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) காவல்துறைக் கமிஷனர் சென்னை மாநகர்சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழுவின் தலைவராவர். இவர் பக்கிங்ஹாம் கால்வாயின் மேற்கு புறத்தில் கூடுதலாகப் புகைவண்டி மேடை ஒன்றைக் கட்டி அங்கு நேரடியாகப் புகை வண்டிகள் வந்து சேரவும், இரயில் பயணிகள் மூர் அங்காடிப் பகுதி வழியாக வெளியேற வழி ஒன்றை அமைக்கவும் வகை செய்யும் செயற்குறிப்புக்கு ஆதரவாக 7-2-1970 நாளன்று தமது கருத்துக்களை எழுதினர். இச் செயற்குறிப்பு தென் பிராந்திய ரயில்வே நிர்வாகத்தினர் அனுப்பியதாகும். மத்திய இரயில் நிலையத்தில் வாடகை மோட்டார் வண்டிகளை நிறுத்துவதற்கான வசதிகளைப் பெருக்க இச் செயற்குறிப்பு வகுக்கப்பட்டது. இச் செயற்குறிப்பினை தென் பிராந்திய இரயில்வே நிர்வாகத்தினரும், தமிழ் நாடு அரசும் பரிசீலனை செய்து வருகின்றன.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்லிய கருத்து ஒரு நீண்டகாலத் திட்டம் பற்றியதாக இருக்கிறது. இப்போது இந்த ரயில் நிலையத்தில் வாடகைக் கார்கள் நிறுத்துவதற்கு என்ன வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்போது மேலும் ஒரு பாதை இரண்டாவது கேட் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு 25 டாக்சிகள் நிறுத்துவதற்குக் கூடுதலான வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 65 டாக்சிகள் நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் உள்ளன.

1st February 1972]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வாடகைக் கார் ஓட்டுகிறவர்கள் பலருக்கு லைசென்சு இல்லை. லைசென்சு இல்லாமலே ஓட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஓட்டுபவர்களுக்கு 'டிஸ்க்' ஒன்று கொடுக்கிறார்கள். அந்த டிஸ்கை லைசென்சு பெற்றிருப்பவர்கள் அவர்கள் லைசென்சு, இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்கள் நகரத்தில் கார்களை ஓட்டுவதாகச் சொல்கிறார்கள். இது அமைச்சருக்குத் தெரியுமா? அதையறிந்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஏதேனும் தகவல் இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நான் அறிந்த அளவில் அது பெருமளவில் நடப்பதாகத் தெரிகிறது. லைசென்சு பெற்றவர்கள் ஏழெட்டு மணி நேரம் ஓட்டிவிட்டு மாலை நேரத்தில் அந்த டிஸ்கை சாதாரணமானவர்களிடம் கொடுத்து அவர்கள் காரை ஓட்டுவதாகவும் அதனால் பல இடையூறுகள் ஏற்படு வதாகவும் தெரிகிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக இதுபற்றி அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கும். ஆனால் 'ஸ்பெசிபிக்காக' குறிப்பிட்ட வகையில் ஏதேனும் புகார் இருந்தால், மேலும் அது அரசிற்கு வசதியளிப்பதாக இருக்கும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III. ANNOUNCEMENT *re* MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

THIRU G. SWAMINATHAN : Sir, there is a Call Attention Notice to-day.........(interruption).

MR. CHAIRMAN : The hon. Member may please wait. Rule 42 (3) has to be suspended. I am taking it up now.

IV. GOVERNMENT MOTION *re* SUSPENSION OF RULE 42(3) OF THE COUNCIL RULES.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-வது விதி, அதன் (3) துணைவிதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில், தற் காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின் கீழ் ஒன்றுக்கு மேற் பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.